**செ. கு. எண்:172** **நாள்: 04.11.2017**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

அறிக்கை 4.11.2017

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், ஏழுதேசம் சின்னத்துறை மீனவ கிராமம் மற்றும் கேரளா மாநிலம் பூவார் பகுதியைச் சேர்ந்த ஆறு மீனவர்கள் 11.10.2017 அன்று கேரள மாநிலம் கோழிக்கோடு மாவட்டம், வேப்பூர் கடல் பகுதியில் மீன் பிடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, அடையாளம் தெரியாத கப்பல் மோதி விபத்து ஏற்பட்டதில், ஆறு மீனவர்களும் கடலில் மூழ்கியதில், இரண்டு மீனவர்கள் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர்.

திரு. சேவியர் என்பவரின் மகன் திரு. ஆன்றனி உயிரிழந்த நிலையில், அவரது உடல் மட்டும் மீட்கப்பட்டது என்றும், அவருடன் கடலுக்கு சென்ற திரு. பத்ரோஸ் என்பவரின் மகன் திரு. ரெம்மியாஸ் என்ற மீனவர் இதுவரை கரை திரும்பவில்லை என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வருத்தம் அடைந்தேன்.

கடலில் மீன் பிடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது கப்பல் மோதிய விபத்தில், உயிரிழந்த திரு. ஆன்றனி அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாயும்;

கடலில் மீன் பிடிக்கும் போது ஏற்பட்ட விபத்தில் காணமல் போன திரு. பத்ரோஸ் என்பவரின் மகன் திரு. ரெம்மியாஸ் அவர்களின் குடும்பத்தின் வறிய நிலையைக் கருத்தில் கொண்டு, அவரின் குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**